**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 13 of 2017

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.மாதையன்

Date : 18.10.2024

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4) 26.05.2016லிருந்து எனது தாயார் மல்லிக்கல் வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். 2017 வரை அங்கு தான் இருந்தார். நான் 2017லிருந்து மல்லிக்கல் வீட்டில் நான் மட்டும் குடியிருந்தேன். 2021லிருந்து எனது குடும்பத்துடன் அந்த வீட்டில் இருந்து வருகிறேன். என் தாயார் அந்த வீட்டில் இருந்த வரை அவருடன் நானும் இருந்தேன். அவருடைய ஆஸ்பிட்டல் செலவுகளை நான் தான் பார்த்து வந்தேன். என் அம்மாவின் மருத்துவ சிகிச்சை நான் செய்து வந்தேன் என்பதற்கு ஆவணங்கள் உள்ளது. அவற்றை தாக்கல் செய்யவில்லை. 2016ம் கடைசியில் எனது அம்மா மாணிக்கம் பெயரில் செட்டில்மெண்ட் எழுதிய விவரம் எனக்கு தெரிய வந்தது. என் அம்மாவிடம் அந்த செட்டில்மெண்ட் பத்திரம் பற்றி நான் கேட்கவில்லை. 2016ல் தேதி மாதம் நியாபகம் இல்லை. சார்பதிவாளர் காரிமங்கலத்திலும், மாவட்ட பதிவாளர் தருமபுரிக்கும் மனு கொடுத்தேன். செட்டில்மெண்ட் பத்திரம் சம்பந்தமாக 2ம் பிரதிவாதி மாணிக்கம், 3 ் பிரதிவாதி செல்விக்கும், எனது அம்மாவிற்கும் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை.

5) என் தாவாவில் 6வது பத்தியில் 1ம் பிரதிவாதியிடம் மே 2016ல் என் அம்மாவிடம் பாகம் பிரித்து தர கேட்டதாகவும் அதற்கு என் அம்மா 2ம் பிரதிவாதி பேரில் ஆவணம் ஏற்படுத்தி விட்டதாக கூறிவிட்டார் என்று

சொல்லப்பட்டுள்ளது என்றால் அது போல் நான் சொல்லவில்லை. சாட்சி தாவாவில் உள்ள 6வது பத்தியை படித்து விட்டு 1ம் பிரதிவாதியிடம் மே 2016ல் என் அம்மாவிடம் பாகம் பிரித்து தர கேட்டதாகவும் அதற்கு என் அம்மா 2ம் பிரதிவாதி பேரில் ஆவணம் ஏற்படுத்தி விட்டதாக கூறிவிட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது என்று கூறுகிறார்.

6) தாவாவில் என் அம்மாவை ஏமாற்றி எனது சகோதரர் மாணிக்கம் செட்டில்மெண்ட் வாங்கி கொண்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா அயிட்டம் 1ஐ சேர்த்து தான் விலை பேசப்பட்டது என்றால் சரிதான். 4 ஏக்கர் 63 சென்ட்டிற்கு விலை பேசப்பட்டது. இது சம்பந்தமாக நான் வில்லங்கம் எதுவும் பார்க்கவில்லை. எனது அம்மா பார்த்திருக்கலாம். அந்த சொத்தில் ஏதேனும் வில்லங்கம் இருந்ததா என்று எனக்கு தெரியாது. என்னுடைய அண்ணன் மகேந்திரன் சாப்ட்வேர் இன்ஜியனிராக வேலை செய்கிறார். அவர் 2004ல் வேலைக்கு சேர்ந்தார். என்னிடம் காட்டப்படும் கிரைய ஒப்பந்தத்தில் 12.12.2001ல் மாணிக்கம், மகேந்திரன் கையெழுத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் உரிமையாளர்கள் தான் முதல் மூன்று கையெழுத்துக்கள் போட்டுள்ளார்கள். அந்த கிரய ஒப்பந்தத்தில் நான் கையெழுத்து போடவில்லை. நான் வெளியூரில் இருந்ததால் என் தரப்பில் எனது சகோதரர்கள் கையெழுத்து போட்டுள்ளார்கள்.

7) கிரயத்திற்கு நான் பணம் தனிப்பட்ட முறையில் ஆவணம் இல்லை. ஆனால் நானும், எனது அம்மாவும் பாதி பாதி பணம் கொடுத்தோம். நானும்எனது அம்மாவும் எந்த தேதியில், எப்படி பணம் கொடுத்தோம் என்று வழக்கில் சொல்லவில்லை. நான் அரசாங்க அனுமதியில்லாமல் சொத்தை

வாங்கியது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. 2004லிருந்து என் சகோரதர்களுக்கு எதிராக தனிப்பட்ட முறையில் தாவா சொத்துக்களை அனுபவித்து வந்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் சரிபாதி என்னுடைய தனிபட்ட அனுபவத்தில் இருந்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நானும் எனது அம்மாவும் கூட்டாக தான் அனுபவித்து வந்தோம். தாவா சொத்திற்கு எந்த ஆண்டு பட்டா மாறுதல் செய்ய மனு கொடுத்தேன் என்று நியாபகம் இல்லை.

8) நான் வழக்கு சொத்து பேரில் வங்கி கடன், பயிர் கடன் எதுவும் வாங்கவில்லை. எனது தாயார் வாங்கியிருக்கலாம். ஆனால் அதைபற்றி எனக்கு தெரியாது. என் அம்மா இறந்த பிறகு தனி நபர் மூலம் வாங்கிய கடன்களையோ, அல்லது வங்கி மூலம் வாங்கிய கடன்களை நான் எதுவும் திரும்ப செலுத்தவில்லை. அந்த கடன்களை பற்றி எனக்கு தெரியாது. என் அம்மா என்னிடம் எதுவும் சொல்லவில்லை. எனக்கு கிரையம் கொடுத்த பாப்பாத்தியம்மாளை தவிர சேகர், கந்தசாமியை விசாரிக்க தயாரா என்றால் எனது வழக்கறிஞர் தான் அதை பற்றி முடிவு செய்வார். அவர்களை விசாரித்தால் சொத்துக்களின் சந்தை மதிப்பு என்ன, அரசாங்க வழிகாட்டி மதிப்பு என்ன, அசல் கிரைய தொகை எவ்வளவு என்று தெரிய வரும் என்றால் சரிதான்.

9) சொத்தை விற்ற சேகர், பாப்பாத்தியம்மாள், கந்தசாமி ஆகியோர் எங்களுக்கு முழு பணமும் கொடுக்காததால் போர் போட கூடாது என்று பிரச்சனை செய்தார்கள் என்றால் போர் போடும் போது பிரச்சனை செய்தார்கள் என்று முதலில் சொல்லி விட்டு பிறகு தெரியாது என்று

சொல்கிறார். நான் அப்போது சென்னையில் இருந்தேன். தாவா சொத்துக்களில் 3 போர்கள் இருந்தது. கிணற்றிலிருந்த மின்சார இணைப்பில் தான் போர்கள் போடப்பட்டது. அந்த போர் போடுவதற்கு எனது தம்பிகள் மணிவேல், மகேந்திரன் பணம் கொடுத்தார்கள். போர் போட்டதற்கான ஆவணங்கள், ரசீதுகள் அதற்குண்டான ஆவணத்தை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. மாணிக்கம் என்னுடைய அம்மா செட்டில்மெண்ட் பத்திரம் அவர் பெயருக்கு எழுதி கொடுத்த பிறகு கடன்களை அடைத்தார் என்றால் அவர் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் பத்திரத்திற்கு பிறகு மாணிக்கம் பெயரில் பட்டா மாறியது என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்த பிறகு வங்கி கடன்களை மாணிக்கம் அடைத்தார் என்றால் எனக்கு தெரியாது. (வாதி தரப்பு வழக்கிறஞர் இதை பற்றியெல்லாம் எதிருரையில் குறிபிடாமல் தற்போது சாட்சியிடம் இதை பற்றி கேட்க முடியாது என்று கூறினார். அவரது ஆட்சேபனைக்குட்பட்டு பதிவு செய்யப்படுகிறது).

10) மாணிக்கம் அவரது பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்த பிறகு வங்கியில் கடன் வாங்கி சொத்தை அபிவிருத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. 10.03.2016ல் நான் என் அம்மாவை மல்லிக்கல் வீட்டில் பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். ஆனால் தேதி, மாதம் நியாபகம் இல்லை. 10.03.2016, 11.03.2016ல் நான் மல்லிக்கல் வீட்டில் குடியிருக்கவில்லைவ. ஓசூரில் குடியிருந்தேன். எனக்கும், எனது அம்மாவிற்கும் பாகமே ஏற்படவில்லை என்பதால் மாணிக்கம் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வரவில்லை என்று சொல்கிறேன்.

அந்த செட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும் வழக்கிற்காக நடைமுறைக்கு வரவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

*11)* தாவா சொத்துக்களின் ஒவ்வொரு அயிட்ட சொத்துக்களின் விஸ்தீர்ணம் குறிப்பிட்டு சொல்ல இயலாது. மொத்தம் 4 ஏக்கர் 63 சென்ட். வழக்கு சொத்துக்கள் கிரையம் பேசும் போதும், கிரையம் பெறும் போதும் நான் இல்லை என்பதால் தான் எனக்கு சொத்து விவரங்கள் தெரியவில்லை என்றால் சரியல்ல. கிரைய பத்திரம் பதிவு செய்யும் போது நான் இருந்தேன். கிரைய பத்திரத்தில் கையெழுத்து போட்டுள்ளேன். கிரைய பத்திரம் எத்தனை மணிக்கு பதிவு அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்று நியாபகம் இல்லை. கிரைய பத்திரத்தை எழுதிய கிரைய எழுத்தர் பெயர் தற்போது எனக்கு நியாபகம் இல்லை. கிரைய பத்திரத்தில் காரிமங்கலத்தை சேர்ந்தவர்கள் சாட்சி கையெழுத்து போட்டார்கள். பெயர் நியாபகம் இல்லை. காரிமங்கலம் பதிவு அலுவலகத்தில் 12, 1 மணியளவில் பதிவு செய்யப்பட்டது. நான் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*12)* கிரைய பத்திரத்தில் 25.02.2004ல் மதியம் 3, 4 மணியளவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ1 கிரைய பத்திரத்தில் என்னுடைய கையெழுத்து உள்ளது. என்னுடைய கையெழுத்தே இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் குடும்ப அங்கத்தினர் என்ற முறையில் தான் நான் கிரையத்தில் பங்கு பெற்றேன் என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்தில் எனக்கு சரிபாதி உரிமையுள்ளதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல்

நான் பேரளவிற்கு தான் பங்கு பெற்றேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்யும் போது எனது அம்மாவிற்கு 75 வயதிற்கு மேல் இருக்கலாம். அசல் வழக்கு எண் 13/2017 வழக்கில் எனது அம்மாவிற்கு 83 வயது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அம்மாவின் வயதின் காரணமாக அவர் தனிப்பட்ட முறையில் எங்கும் போகமுடியாது என்றால் சரிதான். என் அம்மாவிற்கு உடல்நிலை சரியில்லாமல் போக பிறகு தான் அவரால் தனிப்பட்ட முறையில் எங்கும் போகமுடிவில்லை. 2014ல் எனது அம்மாவிற்கு ஸ்டோக் வந்தது. பிறகு சிகிச்சை அளிக்கப்பட்டு எனது அம்மா தனியாக நடமாடி கொண்டிருந்தார். 2016க்கு பிறகு நடமாட்டம் குறைந்து விட்டது. யாருடைய உதவியும் இல்லாமல் தனியாக நடமாட முடியாமல் போய்விட்டது.

13) தாவா சொத்துக்களை நான் கூட்டு உரிமையாளர் என்ற முறையில் சொத்துக்களை பயிர் செய்ததற்கு வருவாய் துறை ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. சாகுபடி அடங்கல், வரி ரசீதுகள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. ஆனால் வரி கட்டியுள்ளேன். தாவாவில் என்ன என்ன ஆண்டுகள், என்ன என்ன பயிர் செய்தேன் என்று சொல்லவில்லை.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)